மின்னிதழ் - 01
ஆடி | ஆவணி | புரட்டாதி - 2023

# வல்லுவம்

## இலத்திரனியல் காலாண்டு சஞ்சிகை



சர்க்கரைப் பொங்கல்

பாதையை மாற்றும் போதை

வாசிப்போம் புத்தகங்களை
வளம்பெறுவோம் வாழ்வதனில்

உத்தியோகம் புருஷ இலட்சணம்

என்னடா நடந்தது பொடியா!
என்னத்தை தேடுகிறாய்?

வெளியீடு
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

# அரசாங்க அதிபரின்
# வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாவட்டத்தில் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களிடையே காணப்படும் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர்தல். அலுவலகப் பணிகளோடு மட்டுமே அரச உத்தியோகத்தர் நின்றுவிடாது ஆக்க இலக்கியப் பணியினையும் முன்னெடுத்துச் செல்லல் மற்றும் மாவட்டத்தின் தூர நோக்கினைக் கருத்திற்கொண்டும் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் கலாசாரப் பிரிவினால் முன்னெடுக்கப்படும் முதலாவது இலத்திரனியல் சஞ்சிகையாக கட்டுரைகள், கவிதைகள், சிறுகதை, பொன்மொழிகள் போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக **'வல்லுவம்'** மலர்ந்துள்ளது. இச்சஞ்சிகையானது தொடர்ந்து காலாண்டுக்கு ஒருமுறை பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட இலத்திரனியல் சஞ்சிகையாக வெளிவரவுள்ளது. இதுவரை சஞ்சிகைக்கான ஆக்கங்களைச் சமர்ப்பிக்காத அரச உத்தியோகத்தர்கள் கவலைப்படத் தேவையில்லை. தொடர்ந்து, காலாண்டுக்கு ஒருமுறை இச்சஞ்சிகை வெளிவரவுள்ளது. சஞ்சிகைக்கான ஆக்கங்களை மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

மேலும் **'வல்லுவம்'** இலத்திரனியல் சஞ்சிகைக்கான ஆக்கங்களை வழங்கிய உத்தியோகத்தர்களுக்கும், சஞ்சிகைக்கான ஆக்கங்களை தொகுத்து சஞ்சிகை வெளிவருவதற்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கியவர்கள் பாராட்டுக்குரியவர்கள். தொடர்ந்து இச்சஞ்சிகை வெளிவரவேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன்.

அ.சிவபாலசுந்தரன்
மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

# வணக்கம்

“வல்லுவம்” என்ற பெயருடன் காலாண்டு சஞ்சிகையை வெளியிடுவதில் நாம் மகிழ்ச்சி அடைகிறோம். இந்த சஞ்சிகைக்கான பெயரினை அழகு தமிழில் தெரிவு செய்து தந்த அரசாங்க அதிபருக்கும் நன்றி.

“வல்லுவம்” என்ற சொல்லுக்கு அகதத்துவம், அபரசக்தி, அதீனத்துவம் அச்சுவம் எனப்பல பொருள் உண்டு. ஆயினும் எமது முன்னோர் பாவித்த “காசுப்பை” வல்லுவம் என்றே அழைக்கப்பட்டதை ஞாபகப்படுத்துகிறேன்.

இந்தச்சஞ்சிகை யாழ்.மாவட்டச் செயலகத்தால் வெளியிடப்படும் சஞ்சிகை. இங்கு ஆக்கங்களை அனுப்புவோர் யாழ்.மாவட்டச் செயலகத்துடன் யாழ்.மாவட்டத்தின் 15 பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கிய அரசாங்க உத்தியோகத்தர்களாக இருக்க வேண்டும்.

இங்கு எழுதப்படும் ஆக்கங்களுக்கு ஆக்க கர்த்தாக்களே பொறுப்புடையவர்கள். வேறு ஒருவரின் ஆக்கத்தினை தமது பெயரில் யாரும் எழுதி அனுப்பும் சிறுபிள்ளைத்தன செயற்பாடுகளுக்கு இங்கு இடமில்லை.

“வல்லுவம்” என்ற இந்த காலாண்டு சஞ்சிகையை மின்னிதழாக வெளியிடுகிறோம். சஞ்சிகைக்கு தோள் கொடுக்கும் அத்தனை உள்ளங்களுக்கும் பாராட்டும் வாழ்த்துகளும்.

என்னை ஏகமனதாக “வல்லுவம்” காலாண்டு மின்னிதழுக்கு ஆசிரியராகத் தெரிவு செய்த நூலாக்க குழுவினருக்கு பேரன்பும் நன்றியும்.
அடுத்த இதழுடன் சந்திப்போம்.
அடுத்த இதழுக்கு ஆக்கங்களை அனுப்பத்தயாராகுங்கள்.
வல்லுவம் சிகரம் தொட செயற்படுவோம்.

நன்றி.

ஆசிரியர்.

# வல்லுவம்

## இலத்திரனியல் சஞ்சிகைக்குழு

போசகர்

**திரு.அ.சிவபாலசுந்தரன்**

அரசாங்க அதிபர், யாழ் மாவட்டம்

ஆலோசகர்கள்

**திரு.ம.பிரதீபன்**

மேலதிக அரசாங்க அதிபர், யாழ் மாவட்டம்

**திருமதி.ச.கி.நி.கமலராஜன்**

உதவி மாவட்ட செயலாளர், யாழ் மாவட்டம்

**திருமதி.சு.விஜயரத்தினம்**

மாவட்ட சிரேஸ்ர கலாசார உத்தியோகத்தர்,கலாசாரப் பிரிவு

நூலாசிரியர்

**திருமதி.லதா கந்தையா**

அபிவிருத்தி உத்தியோகத்தர்,

வடக்கு வலய பதிவாளர் நாயகம் திணைக்களம்

துணை ஆசிரியர்

**திரு.தி.கமலரூபன்**

அபிவிருத்தி உத்தியோகத்தர், திட்டமிடல் கிளை

ஒப்புநோக்குநர்

**திரு.ப.றமேஸ்**

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்,

வடக்கு வலய பதிவாளர் நாயகம் திணைக்களம்

அட்டைப்படம் & பக்க வடிவமைப்பு

**திரு.க.கோமகன்**

அபிவிருத்தி உத்தியோகத்தர், தாபனக்கிளை

சஞ்சிகைக்குழு உறுப்பினர்கள்

**திரு.இ.கிருஷ்ணகுமார்**

மாவட்ட கலாசார உத்தியோகத்தர், கலாசாரப் பிரிவு

**திரு.ம.நித்தியானந்தநேசன்**

பிரதிப் பணிப்பாளர். புள்ளிவிபரக் கிளை

**திரு.க.இரகுநாதன்**

மாவட்ட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர், சமுர்த்திக்கிளை


**திருமதி.த.பிருந்தியா**

அபிவிருத்தி உத்தியோகத்தர். புள்ளிவிபரக் கிளை

# வல்லுவம்

## உள்ளே


| | |
|---|---|
| வாசிப்போம் புத்தகங்களை.... | 01 |
| பாதையை மாற்றும் போதை.... | 03 |
| காணாததைக் கண்ட பூனை.... | 07 |
| பிரிய யூதாஸிற்கு.... | 08 |
| மாயாவியும் சிதறுமணிகளும்.... | 09 |
| உத்தியோகம் புருஷ இலட்சணம்... | 11 |
| தூக்கமும் கனவும்.... | 12 |
| இலங்கையின் பொருளாதார.... | 13 |
| வன்முறையே வாழ்வாகிப் போச்சு.... | 15 |
| சர்க்கரைப் பொங்கல்.... | 16 |
| தொ(ல்)லைபேசி.... | 19 |
| என்னடா நடந்தது பொடியா!.... | 28 |
| லூசி திரைப்பட விமர்சனம்.... | 29 |










# வாசிப்போம் புத்தகங்களை வளம்பெறுவோம் வாழ்வதனில்

**திருமதி.மாதுரி சிவதர்சன்,**
அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

நாம் வித்தகம் படைக்கவும் ~ நம்
வாழ்க்கையை பண்படுத்தவும் ~ நம்
புத்தியைத் தீட்டவும் உதவும்
நல்லாயுதங்களாக புத்தகங்கள் விளங்குகின்றன.

நூலகங்கள் பூந்தோட்டம் என்றால்
அங்குள்ள புத்தகங்கள் கருத்து மணம் வீசும் மலர்களே!

மலரைச் சுற்றித் தேனீக்கள் இருப்பதைப்போல~நல்ல
நூல்களைச் சுற்றி உயர்வான வாசகர் கூட்டம் இருக்குமே!

நல்லாசானாக, பொழுது போக்குச் சாதனமாக
நல்ல நண்பனாக, அறிவுரை வழங்கும் சான்றோனாக
விளங்கி நிற்பவை புத்தகங்களே!

புத்தாக்க விடயங்களை கற்று, அறிவை வளர்த்துக் கொள்ளவும்
நாம் பரந்துபட்ட உலக அறிவைப் பெற்றுக் கொள்ளவும்
உறுதுணையாய், ஊன்று கோலாகி நிற்பவை நூல்களே!

தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தற்கு
கற்றனைத்தூறும் அறிவு ~ எனும்
வள்ளுவன் வாக்கிற்கமைய ~ நாம்
எத்தகைய அறிவார்ந்த நூல்களை ஆழமாகக் கற்கிறோமோ
அவ்வுயரத்திற்கு பூரண அறிவைப் பெற முடியுமே!

வாசிப்பானது வெறுமனே நூலறிவை மட்டும் வழங்குவதில்லை~மாறாக
சிந்தித்துச் செயற்படும் ஆற்றலையும் பூரண நிதானத்தையும்
நம்மவர்க்கு வழங்குகின்றதே!

வாசிக்கவோ நல்ல ஆக்கங்களை எழுதவோ விரும்பாத சமூகம்
சினிமா நாகரிகத்தில் மூழ்கி திளைத்து வருவது கவலைக்குரியதே!
இந் நிலைமையினால் அடுத்த தலைமுறை எம் வரலாறுகளைக் கூட
அறிய முடியா துர்ப்பாக்கிய நிலை வந்துவிடுமே!




நூல்கள் நிறைந்த சூழல்தனில் வளரும் குழந்தைகள்
அறிவார்ந்தவர்களாக நற்பண்புள்ளவர்களாக
தன்னம்பிக்கை நிறைந்தவர்களாக வாழ்க்கையிலே
முன்னேறத் துடிப்பவர்களாக விளங்குவார்களே!

எனவே! புத்தகங்களை காலமெனும் அலைகடலில்
உயர்ந்து நிற்கும் கலங்கரைத் தீபங்கள் என்போம்..

அறிவை விருத்தி செய்திடவே ~ நல்ல
புத்தகங்களை நாளும் படிப்போம்..

வாசிப்பை நேசிப்போம் ~ நம்
வாழ்வதனை பண்படுத்துவோம்.
வாழ்வில் வெற்றிகள் பெற்றிடுவோம்.



**“மதுவை மறப்போம் ! மதுவை ஒழிப்போம் !**
**மது தீமைகளின் தாய்”**

உலக அழிவின் அடையாளங்களில் போதைப் பாவனை பெருகுவதும் ஒன்றாகும். அதை நாம் இன்று நிதர்சனமாகக் கண்டு வருகின்றோம். ஆரம்ப காலத்தில் சாராயம், கள் என்றிருந்த போதை இன்று பல்வேறு வடிவம் பெற்று புதுப்புது வடிவங்களில் உலா வந்து கொண்டிருக்கின்றது.

திடீர் பணக்காரனாக வேண்டும் என ஆசைப்படுபவர்கள் போதை வியாபாரத்தில் ஈடுபடுவதை அதற்கான இலகுவான வழியாகப் பார்க்கின்றனர். ஆரம்பத்தில் நகர்ப்புறங்களைக் குறிவைத்த இவர்கள் இப்போது கிராமப் புறங்களையும் கூட குறிவைத்து குழி பறித்து வருகின்றனர். இதனால் அப்பாவி இளைஞர்கள் மட்டுமன்றி யுவதிகள் கூட போதை முகவர்களின் வியாபார யுக்தியில் வீழ்ந்து வருகின்றனர்.

இன்றைய உலகில் மக்கள் சமுதாயத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் எதிராக எழுந்திருக்கும் மாபெரும் பிரச்சினை தான் போதைப்பொருள் பாவனை. போதைப்பொருட்களினால் தனி மனிதன், குடும்பம், சமுதாயம் என எல்லா வகைகளிலும் பாதிப்புக்களே ஏற்படுகின்றன. போதை என்பது தன்னிலை மறக்கச் செய்தல், உடல் உள பாதிப்புக்களை ஏற்படுத்தல் என்பதாகும். ஒருவன் தன் சிந்தனையை போதையில் புதைத்து மன மயக்கத்தையும் குழப்பத்தையும் ஏற்படுத்திக் கொள்கின்றான். இத்தகைய போதைப் பொருட்களில் சிகரட்,மது, ஹெராயின், கஞ்சா, புகையிலை பான் மசாலா என பல வகை அடங்கும்

# பாதையை மாற்றும் போதை...


**க.சோபனா**
அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
தெல்லிப்பளை.





**“பணம் கொடுத்து வாங்கக் கூடியதாக அறிவு இருந்தால் மக்கள் எவ்வளவு கொடுத்தும் வாங்குவார்கள். இப்படியிருக்க, அறிவை கெடுக்க கூடியதை பணம் கொடுத்து வாங்குவது ஆச்சரியமாக உள்ளது.”**

ஒருவன் போதையை பயன்படுத்தியதும் தனது அறிவை இழக்கின்றான். மயங்குகின்றான். உடல் பலவீனமடைகிறது. உளம் கெட்டு விடுகின்றது. தன்னால் உறுதியாக நிற்க முடியாமல் ஆடி அசைந்து விழுகின்றான். அதன் பின் அவனுக்கு ஏற்படும் எந்தவொரு விடயத்தைப் பற்றியும் அறிய முடியாதவனாய் இருக்கின்றான். இத்தகைய போதைப் பாவனையானது உடல் ரீதியாக மன ரீதியாக ஒழுக்க ரீதியாக பாதிப்புக்களை ஏற்படுத்தி அவனது வாழ்க்கையை அவனது குடும்பத்தினரின் வாழ்க்கையை சீரழித்து சின்னாபின்னமாக்கக்கூடியது.

சம காலத்தில் பாடசாலை மாணவர்கள் போதைக்கு அடிமையாகும் தன்மை அதிகரித்துள்ளது யாவரும் அறிந்ததே. பாடசாலை சென்று பின்னர் பல்கலைக்கழக படிப்பு முடித்து பட்டதாரிகளாக வருவதற்கு பதிலாக போதைக்கு அடிமையாகி பரிதாபகரமாக காட்சி தருகின்றார்கள்.

இன்றைய மாணவர்கள் தங்களது இளமைப் பருவத்தில் நடாத்தும் அட்டகாசங்களைப் பற்றி சிந்திக்கிறார்களே தவிர அதனால் ஏற்படும் விபரீதங்களைப் பற்றி சிந்திப்பதில்லை. இதன் விளைவாகவே போதைக்கு அடிமையாகின்றனர். திடகாத்திரமாக, ஆரோக்கியமாக ஆளுமையுள்ளவர்களாக வளர்வதற்கு போதைப்பாவனை தடையாக உள்ளது என்பதனை உணராமல் செயற்படுகின்றார்கள். எந்தவொன்றையும் அனுபவித்துப் பார்க்க வேண்டும் என்ற ஆவலும் ஆசையும் சில நேரம் அவர்களது அழிவுக்கே காரணமாகி விடுகின்றது. நண்பர்களுடன் பழகும் போது சிகரட் புகைத்தல், பியர் குடித்தல் என்ற பழக்கத்துடன் பீடா, பாபுல், பான்பராக், மாவா போன்ற பாவனைக்கு உள்ளாகி இறுதியில் எல்லா போதைக்கும் அடிமைகளாகிவிடுகின்றனர்.



**செயல் புரியும் ஆற்றல் உள்ளவன், செயல் புரிவான். அது இல்லாதவன் வெறுமனே பேசிக்கொண்டு இருப்பான்**

**-பெர்னாட்ஷா-**

## போதைப் பாவனைக்கான முக்கிய காரணங்கள்




- வீட்டுச் சூழல்
- சமூகச் சூழல்
- குடும்பப் பிரச்சினை
- வேலைச் சுமை
- சினிமா மோகம்
- தோல்வி

## போதைக்கு அடிமை என்பதை எவ்வாறு இனங்காணலாம்?

- ஆரம்பத்தில் பயன்படுத்திய போதைப்பொருளின் அளவை விட சிறிது சிறிதாக அதிகரித்துக் கொண்டு செல்லுதல்.
- அடிக்கடி போதைப்பொருள் பாவிக்க வேண்டும் என்று தோன்றுதல்
- எதை இழந்தாலும் போதை தரக்கூடிய பொருளை அந்தந்த நேரத்தில் பெற்றுக் கொள்ளுதல்.
- உடல் நிலையில் மாற்றங்கள் தென்படல்.
- செயற்பாடுகளில் மாற்றம் தென்படல்.



**இவை எல்லாம் நீங்கள் போதைக்கு அடிமையாகிக் கொண்டிருக்கின்றீர்கள் என்பதை உங்களுக்கு உணர்த்தும் எச்சரிக்கை மணிகள்.**

**மணி** அடிக்கும் போதே விழித்துக் கொண்டால் பாரிய ஆபத்திலிருந்து உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ள முடியும்.

## போதையினால் ஏற்படும் விளைவுகள்

போதைப்பாவனையால் மூளையின் தொழிற்பாட்டில் மாற்றம் ஏற்படுகின்றது. இதனால் நடத்தை மாற்றங்களும், சிந்தனை, தீர்மானங்கள், ஞாபகம் என்பவற்றிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அதுமட்டுமன்றி சுவாசப் பொறிமுறையின் செயற்பாட்டைக் குறைக்கும் தன்மையும் உண்டு.

போதைப் பொருட்கள் எமது ஞாபக சக்தியை விழுங்கி ஏப்பமிடுகின்றன. நரம்பு மண்டலத்தை வலுவிழக்கச் செய்கின்றன. இரத்த அழுத்தத்தை அதிகரித்து இதயத்துடிப்பைப் பாதிக்கின்றன. கவனத்தைச் சிதைத்து குழப்பமான மன நிலைக்கும் குற்ற உணர்ச்சிக்கும் நம்மை ஆளாக்குகின்றன. சோர்வையும் உடல் பலவீனத்தையும் உருவாக்குகின்றன.


போதையின் கோரப்பிடியில் அகப்பட்டவர்கள் அஞ்சாமல் பாலியல் குற்றங்களிலும் ஈடுபட்டு அதன் மூலம் பல நோய்களை உருவாக்கிக் கொள்கின்றனர்.

இதனால் மாணவர்கள் மற்றும் பெரியவர்கள் போதைக்கு அடிமையாகும் போது குடும்பத்திலும் சமூகத்திலும் பிரச்சினைகள் உருவாகின்றன. மாணவர்களுடைய எதிர்கால கனவுகள் நாசமாகின்றன. இலக்கில்லாமல் வாழ்வு அழிந்து விடுகின்றது. புத்தகங்களை சுமந்து செல்ல வேண்டியவர்கள் பல்வேறுபட்ட நோய்களை சுமந்தவர்களாக நடமாட ஆரம்பிக்கின்றனர்.

## போதைப்பாவனையிலிருந்து விடுபடல்

போதையிலிருந்து விடுதலை பெற மருத்துவமனையை நாடலாம். அதாவது மருத்துவ மனையில் சிறிது காலம் தங்கியிருந்து மருத்துவரின் நேரடிக் கண்காணிப்பில் போதைப் பழக்கத்திலிருந்து சிறிது சிறிதாக விடுபடமுடியும். சிறிது சிறிதாக போதைப் பாவனையை குறைத்து முற்றாக அதிலிருந்து விடுதலை பெற முடியும்.
போதையிலிருந்து விடுபடுகின்ற காலத்தில் தூக்கமின்மை, குழப்பம், கோபம், எரிச்சல், வியர்வை என பல பக்க விளைவுகள் தோன்றும். இவை மனம் சார்ந்த விளைவுகளே. இவற்றைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

மாணவர்கள் இப்பிரச்சினையிலிருந்து விடுபட பெற்றோர்கள் அக்கறை எடுக்க வேண்டும். பிள்ளையின் மீது அதிக அன்பு காட்டி ஏமாந்து போகாமலும் அதிக கோபத்தையும் வெறுப்பையும் காட்டி ஒதுக்கிவிடாமலும் நடு நிலைமையுடன் நடந்து பிள்ளையின் வாழ்வை சீர் செய்ய முனைய வேண்டும்.
எமது சமுதாயத்தில் போதைப்பொருட்கள் விற்பனை, விநியோகம், உபயோகம் தொடர்பில் ஒவ்வொருவரும் விழிப்புடன் இருந்தால் ஓரளவிற்கு பாதிப்புக்களிலிருந்து விடுபட முடியும் என்பதுடன் காலப் போக்கில் போதைப் பாவனையை கட்டுக்குள் கொண்டு வரலாம்...!




# காணாததைக் கண்ட பூனை



சுற்றித் திரிந்து தித்திக்கும் தேன்கனி
பற்கல மாந்திய வெளவால் ஒன்று
வாழ்வில் அருந்தி அறிந்திடா
இன்பக் கனிகள் கண்டு

மனம் நொந்து இருந்து – அந்த
அதிசயக் கனிகளை அள்ளித் தரும்
மரம் சுற்றி வந்து
தொங்கிக் கிடந்து கனிகளை
மாந்திடச் சித்தங் கொண்டு
சூழ இருந்ததெதையும் கருதாது
சிறை விரிக்க ~ இலந்தம்
மென்மைச் சிறகினில்
பற்பல ஓட்டைகள் செய்துவிட
“ஐயோ இது எனை அழித்திடுமோ” வென
அலறிக் கொண்டு
சிந்தை பதறி உதறி உதறிச்
சிறைப்பட்டது.


அ.சிவஞானசீலன்
கலாசார உத்தியோகத்தர்
நெடுந்தீவு பிரதேச செயலகம்.

ஆழகை பந்றி கனவு காணாதீர்கள்
அது உங்களின் கடமையை பாழாக்கிவிடும்
கடமையை பந்றி கனவு காணுங்கள்
அது உங்களின் வாழ்க்கையை அழகாக்கும்
டாக்டர் அப்துல் கலாம்



# பிரிய யூதாஸிற்கு புனித மரியா எழுதியது..

எனதருமை மகனே யூதாஸ்
முள்ளடர்ந்த என்பெருங் காடுகளில்
சிறு குரலோடை தானுமில்லை நானள்ளிப் பருக
ஈமச்சாம்பலால் மூடுண்ட எனது
மண்பட்டினங்களிற்கு
திரும்புவதாயில்லை பழம்பாதைகள்
முன்னறிவிக்கப்படாத இரவுகள் பலிகளால் நிறைந்தபோது
பகல்களிடம் பரிமாறத் தசைகள் தானும்
இல்லாத நாளொன்றில் தான்
காட்டிக்கொடுத்தாய்
என் ஒற்றைப் பிள்ளையை முத்தம்
அப்போது
முப்பது வெள்ளிக்காசுகளென ஒளிரக்கண்டேன்
உன் உதடுகளில்
இப்போதோ
வெறுமையின் பெருங்கதவங்களைத் திறந்து
உள்நுழைவார் யாருமில்லை
ஒரு நூற்றாண்டுக்காலத் தனிமைக்கான
இசைத்தட்டை
சுழலவிடுகிறேன் ~நான்
இனி
எனது துயரத்தின் சாயலில்
உனது முகம்

பிரயாந்தி அருமைத்துரை
சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்



# மாயாவியும் சிதறுமணிகளும்......

யாருக்காகவோ கொடுக்கும்
முக்கியத்துவம்.
யாருக்கோ கொடுக்கும்
நேரத்தின் பெறுமதி.
யாருக்கோ கொடுக்கும்
விட்டுக்கொடுப்பை
உங்களை நேசிப்போருக்காக
செய்யத்தவறி விடுகிறீர்கள்.

உங்கள் மனங்களில்
ஏற்கனவே ஒரு அபிப்பிராயத்தை
உருவாக்கிக்கொள்கிறீர்கள்.

ஒரு மாயக்கண்ணாடிக்குள் நீங்கள்
வசியப்படுத்தப்பட்டு விடுகிறீர்கள்.

அதனால் தான்
முரண்டுபிடிக்கும்
அன்பின் ஆழத்தை உங்களால்
புரிந்துகொள்ள முடியவில்லை.

புரிதல் இல்லாத இதயங்கள் தான்
உடைந்து போகின்றன

புரிதல்
சிதறுமணிகளாகும்போது
முதலில் உடைந்து போவது
உண்மை தான்.




பொய்யும் பசப்பு வார்த்தைகளும்
சூதுகளையும்
பணிவென்ற போர்வைக்குள் போர்த்தி
அணைத்துக்கொள்வதில் உங்கள்
மனங்களை மலர்த்திக்கொள்கிறீர்கள்.

நீதிக்கான மானிடக்குரல்களை
நீங்கள் அசட்டை செய்யும்
போதெல்லாம்
உங்கள் ஆத்மாவை
மாயை பற்றிப்பிடித்து விட்டதென்பதே
பொருள்.

நீதிக்கான குரல்களை
ஏளனப்படுத்தும் போதெல்லாம்
நீங்கள்
அறவழியை புதைத்துக்கொள்கிறீர்கள்.

நீதியைப்புறந்தள்ளும் போதெல்லாம்
உங்கள் இறைமை
கேள்விக்குறியாகிறது.

எது எப்படியானாலும்
நேசித்தவர்களை
இழந்துவிடக்கூடாதென்பதற்காகவே
நேசிப்போர் தம்மை ஒறுத்து இறங்கி
வருவதுண்டு.

நேசிப்போரை
இழந்துவிடக்கூடாதென்பதற்காகவே
நல்லிரவிலும் தமது ஆன்மா
கலக்கமுற்று இருப்பதை
வெளிப்படுத்துவதுண்டு.

எப்படியாவது புரிந்துவிடுவீர் என
நம்பினால் மாயாவியை

அணைத்துக்கொண்டிருப்பதில் தான்
இன்பம் அடைகிறீர்கள்.

மாயாவி ஒரு கபடன்.
மாயாவி இருவேடம் தரித்த
ராட்சதன்
தகவல் திருடன்.
தந்திரம் போர்த்த மந்திரக்காரன்.
தன்னை அமைதிப்புறாவாக
அலங்கரித்த வேடக்காரன்.

ஆனாலும் மாய மயக்கத்தால்
மாயாவியை
அணைத்துக்கொண்டிருப்பதில் தான்
இன்பம் அடைகிறீர்கள்.

அறிவுரைகளை யார்தான்
கேட்பதுண்டு?
விழிப்புணர்வை யார்தான்
மனங்கொள்வது?

இறந்து போனவர்களுக்காகத்தானே~
இந்த உலகத்தோர் அதிகம்
அழுது கொள்கிறார்கள்.

மனதால் இறந்து
கொண்டிருப்போருக்காக இரங்குவதும்
இல்லை.
அழுவதும் இல்லை.

பல இதயங்கள் புரிதல் இல்லாமலே
தினம் தினம் உயிரோடு
இறந்து போகின்றன.



லதா கந்தையா
பிரதிப்பதிவாளர் நாயகம் அலுவலகம்,
வடக்கு மாகாணம்.

# உத்தியோகம் புருஷ இலட்சணம்

'யானை இருந்தாலும் இறந்தாலும்
ஆயிரம் பொன்' என்று
காலங் காலமாய்
கதை சொல்லி வந்ததால்
தாத்தாவுக்கு அதில்
தாபம் இருந்தது.

தாத்தா தன் ஆசையைத்
தனையன் மீதேற்றியும் ~அது
நிராசையானதால்
எனது தலையில்
ஏற்றப்பட்டிருந்தது.

தாத்தா தன்
தேட்டங்களை விற்றும்
அடமானம் வைத்தும்
'குட்டி' யாகவேனும் ஒன்றைக்
கொண்டு வர வேணும் என்று
பாடாய்ப் பட்டும் ~ அது
பகற் கனவாயிற்று.

காலச் சக்கரம்
கடகடவெனச் சுழன்று
வாழ்க்கைச் சூழலும்
வலம் இடம் ஆனபின்
'யானைக் கனவு'
மெய்ப்பட்டிருந்தது.

'அது இருந்தாலும் இறந்தாலும்
ஆயிரம் பெறும்' என்று
மனைவியும் சொன்னதால் ~ அதை
ஏற்பது என்று
இறுதி
முடிவாயிற்று.

யானை வந்தது.
வந்த யானைக்கோ
வாகனக் கூலி,
வயிற்றுப் பாடு, குளிக்க வார்த்தல்,
கொட்டில் கட்டுதல்.......

இப்படியான
எத்தனைக்கோ மத்தியில்,
எஞ்சியது ஒரு சில சோளப்பொரிகளே.

ஆயினும்
தாத்தா சொன்னால்
சரியாகத்தான் இருக்கும் என்று
இலத்தியைக் கிண்டியே
என் காலம் கழிந்தது.

அ.சிவஞானசீலன்
கலாசார உத்தியோகத்தர்.
நெடுந்தீவு.



# தூக்கமும் கனவும்

வெயிலும் வெக்கையும் வேதனையைத் தந்திடவும்
காலையும் மாலையும் கல்லுண்டாயில் கணக்கெடுப்பு
கணக்கெடுப்பை கச்சிதமாய் அன்றே முடித்துவிட்டேன்
உழைப்பும் களைப்பும் உடலை அசத்த
படுக்கையிலே நெழுந்திட்டேன்
அப்பொழுது பக்கமது இறுக்கமாய் படுத்துக்கொண்டு
வெக்கமது சிறிதுமில்லாமல்
என்னையொருத்தி ஓடிவந்து தழுவிக்கொண்டாள்
அவளை அள்ளி அணைப்பதற்கு நான் முயலவில்லை
என்றாலும் தள்ளிவிட மனமும் இல்லை தழுவட்டும் என்றுவிட்டடன்
அதன் பின் இன்னொருத்தி வந்தாள்
வானவில் வடநாட்டுக்காரி
வானம் பாடியதை இசையூட்டும் மாயக்காரி
என்ன இது இரு மங்கை ஒரு படுக்கை
எனக் கேட்பீர், பொறுத்திடுக
முதலில் வந்தவள் தூக்கம்
மற்றொருத்தி கனவு மங்கை

திரு க.சுதர்சன்
கிராம அலுவலர்
பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்

